## நகர்மன்ற அவசரக் கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 06.09.2018 தேதி வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள அவசரக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011ன்படி 25423 ஆகும். தற்போதைய 2018 மக்கள் தொகை 28431 ஆகும். எனவே இந்நகராட்சி பகுதிகளிலுள்ள மொத்த சாலையின் நீளம் 42.04 கி.மீ அதில் தற்பொழுது 5.40 கி.மீ சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் சாலையினை அமைத்து தர கோரிக்கை வைத்தவண்ணம் உள்ளனர். மேலும் தற்சமயம் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதுசமயம் பல சாலைகள் குண்டும் குழியுமாக உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. எனவே சாலையினை மேம்பாடு செய்திடவும் மக்கள் பயன்படுத்தும் வகையில் மேற்கொள்வதற்கு சாலைகள் தேர்வு செய்யப்பட்டு 5 சிப்பங்களாக தயார் செய்து அதற்கான மதிப்பீடு ரூ.234.00 இலட்சத்திற்கு அனுமதியும் மற்றும் நகர் பகுதிகளில் பல இடங்களில் குடிநீர் குழாய்கள் பதித்து 40 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ளதால் பழுதடைந்த குடிநீர் பகிர்மான குழாயினை புதிதாக மாற்றிடவும் அதற்கான மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்திற்கும் மற்றும் நாகங்குடி பகுதியில் குடிநீர் சீரான விநியோகம் செய்திட அப்பகுதியில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைத்திடவும் அதற்கான தொகை ரூ.22.00 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ. 266.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட சாலைப்பணிகள் மற்றும் குடிநீர் பணிகள் அனைத்தும் பொது நிதி அல்லது பல்வேறு திட்டங்களிலிருந்து பெறப்படும் அரசு மான்யத் தொகையினை பெற்று பணிகள் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1379/2011/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 376** **நாள் 06.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 2**

அரசாணை (நிலை) எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 19.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 26.07.2018 ஆகியவற்றின் படி 01.04.2018 முதல் சொத்து வரி சீராய்வு செய்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018 ஆம் தேதிய ந.க.எண்.2055/2018/ஆர்1 சுற்றறிக்கையின் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சியில் மண்டலங்கள் வாரியாக அடிப்படை மதிப்பு திருத்தம் செய்ய அமைக்கப்பட்ட குழுவினரால் சீராய்வு செய்து வழங்கப்பட்ட மண்டலங்களின் மதிப்பின் படியும், அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் படி 01.04.2018 முதல் சொத்து வரி சீராய்வுக்கு ஏற்கனவே உள்ள மண்டலங்களை அடிப்படையாகக் கொண்ட சதுர அடிக்கான மண்டல அடிப்படை மதிப்புகளை (Zonal Basic Value) மறு நிர்ணயம் செய்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| மண்டலம் | 01.04.2008ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை (மண்டல மதிப்பு) | 01.04.2018ல் மாற்றம் செய்யப்பட்ட மண்டலம் | 01.04.2018ல் சதுர அடிக்கு நிர்ணயம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தொகை (மண்டல மதிப்பு) |
|---|---|---|---|
| B - Zone | 3.60 | A - Zone | 5.40 |
| A - Zone | 1.05 | B - Zone | 1.80 |
| C - Zone | 0.25 | C - Zone | 0.60 |

அரசாணை (நிலை) எண் 73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 19.07.2018 மற்றும் அரசு ஆணை (நிலை) எண் 76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MAIV) துறை நாள் 26.07.2018 ஆகியவற்றின் படி 01.04.2018 முதல் சொத்து வரி சீராய்வு செய்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 20.08.2018 ஆம் தேதிய ந.க.எண்.2055/2018/ஆர்1 சுற்றறிக்கையின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி குடியிருப்புகளுக்கு 50 சதவீதத்திற்கு மிகாமலும், குடியிருப்பு அல்லாதவைகளுக்கு 100 சதவிகிதத்திற்கு மிகாமலும் சொத்துவரி உயர்வு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## ZONE – A

| Sl.No | Ward No | Name of the Street (in Tamil) | A - ZONE |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 4 | லெட்சுமாங்குடி கடைத்தெரு | A |
| 2 | வார்டு எண் 15 | அப்துல் ரஹ்மான் ரோடு | A |
| 3 | வார்டு எண் 20 | பெரிய கடைத்தெரு | A |
| 4 | வார்டு எண் 22 | நத்தர் கனி ரோடு | A |

## ZONE – B

| Sl.No | Ward No | Name of the Street (in Tamil) | B - ZONE |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 1 | வ.ஊ.சி காலனி | B |
| 2 | வார்டு எண் 1 | கோரையாா் கடைத்தெரு | B |
| 3 | வார்டு எண் 2 | ராஜகோபாலசுவாமி தோட்டம் தெரு | B |
| 4 | வார்டு எண் 2 | தேர் வடக்கு தெரு | B |
| 5 | வார்டு எண் 2 | பாரதி நகர் | B |
| 6 | வார்டு எண் 3 | கொரடாச்சேரி ரோடு | B |
| 7 | வார்டு எண் 4 | திருவாரூர் மெயின் ரோடு | B |
| 8 | வார்டு எண் 4 | கம்பர் தெரு | B |
| 9 | வார்டு எண் 4 | தென்றல் நகர் | B |
| 10 | வார்டு எண் 4 | கிரீன் நகர் | B |
| 11 | வார்டு எண் 4 | ஆயிஷா நகர் | B |
| 12 | வார்டு எண் 4 | குட்வில் நகர் | B |
| 13 | வார்டு எண் 4 | ஷா ஆலிம் நகர் | B |
| 14 | வார்டு எண் 4 | ஜன்னத் நகர் | B |
| 15 | வார்டு எண் 4 | ஜன்னத் நகர் முதல் தெரு | B |
| 16 | வார்டு எண் 4 | ஜன்னத் நகர் இரண்டாம் தெரு | B |
| 17 | வார்டு எண் 4 | ஜன்னத் நகர் மூன்றாம் தெரு | B |
| 18 | வார்டு எண் 4 | காதர் ஒலி அப்துல்லா நகர் | B |
| 19 | வார்டு எண் 4 | காமராஜர் காலனி | B |
| 20 | வார்டு எண் 4 | உமர் ஒலி நகர் | B |
| 21 | வார்டு எண் 5 | சிஸ்தி நகர் | B |
| 22 | வார்டு எண் 6 | ஜமாலியா தெரு | B |
| 23 | வார்டு எண் 7 | நேருஜி ரோடு | B |
| 24 | வார்டு எண் 7 | புளியங்குடி தெற்கு தெரு | B |
| 25 | வார்டு எண் 7 | காந்தி நகர் | B |
| 26 | வார்டு எண் 7 | புளியங்குடி வடக்கு தெரு | B |
| 27 | வார்டு எண் 7 | முகம்மது அலி தெரு | B |
| 28 | வார்டு எண் 7 | அப்துல் கலாம் ரோடு | B |
| 29 | வார்டு எண் 8 | ஆசாத் ரோடு | B |
| 30 | வார்டு எண் 8 | சிவன் கோவில் தெரு | B |
| 31 | வார்டு எண் 8 | அப்துல் ரஹ்மான் ரோடு | B |
| 32 | வார்டு எண் 8 | சையது உசேன் ரோடு | B |
| 33 | வார்டு எண் 8 | ஆஸ்பத்திரி ரோடு | B |
| 34 | வார்டு எண் 9 | ஜெகநாதபிள்ளை தெரு | B |
| 35 | வார்டு எண் 9 | ஆஸ்பத்திரி லைன் | B |
| 36 | வார்டு எண் 9 | அப்துல் ரஹ்மான் ரோடு | B |
| 37 | வார்டு எண் 10 | மரக்கடை கீழத்தெரு | B |
| 38 | வார்டு எண் 11 | மரக்கடை மேலத்தெரு | B |
| 39 | வார்டு எண் 11 | மரக்கடை வடக்கு தெரு | B |
| 40 | வார்டு எண் 11 | மரக்கடை மெயின் ரோடு | B |
| 41 | வார்டு எண் 11 | உத்திராபதி நகர் | B |
| 42 | வார்டு எண் 13 | மரக்கடை தெற்கு தெரு | B |
| 43 | வார்டு எண் 13 | மேல்கொண்டாழி தமிழர் தெரு | B |
| 44 | வார்டு எண் 15 | மேலப்பள்ளி லைன் | B |
| 45 | வார்டு எண் 15 | பாய்க்காரத்தெரு | B |
| 46 | வார்டு எண் 15 | ஹாஜியார் தெரு | B |
| 47 | வார்டு எண் 15 | புதுத்தெரு | B |
| 48 | வார்டு எண் 16 | மேலத்தெரு | B |
| 49 | வார்டு எண் 16 | சின்னப்பள்ளி தெரு | B |
| 50 | வார்டு எண் 16 | மேலப்பள்ளி சந்து | B |
| 51 | வார்டு எண் 17 | பெரிய தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 52 | வார்டு எண் 18 | ரஹ்மானியா தெரு | B |
| 53 | வார்டு எண் 18 | கமாலியா தெரு | B |
| 54 | வார்டு எண் 18 | நேருலைன் | B |
| 55 | வார்டு எண் 19 | இஸ்மாயில் தெரு | B |
| 56 | வார்டு எண் 19 | நூரியா தெரு | B |
| 57 | வார்டு எண் 19 | முகம்மது அலி தெரு | B |
| 58 | வார்டு எண் 19 | ஹமீதியா தெரு | B |
| 59 | வார்டு எண் 19 | ஜாவியா தெரு | B |
| 60 | வார்டு எண் 19 | ரஹ்மானியா தெரு | B |
| 61 | வார்டு எண் 20 | ஜாவியா தெரு | B |
| 62 | வார்டு எண் 20 | ஜின்னா தெரு | B |
| 63 | வார்டு எண் 21 | நூரியா தெரு | B |
| 64 | வார்டு எண் 21 | மஜ்ஜிதியா தெரு | B |
| 65 | வார்டு எண் 21 | சவுக்கத்அலி தெரு | B |
| 66 | வார்டு எண் 21 | நியூ சவுக்கத்தலி முதல் தெரு | B |
| 67 | வார்டு எண் 22 | பண்டுதக்குடி தமிழர் தெரு | B |
| 68 | வார்டு எண் 22 | அன்வாரியா தெரு | B |
| 69 | வார்டு எண் 23 | நாகங்குடி வடக்கு தெரு | B |
| 70 | வார்டு எண் 23 | நாகங்குடி காதர் பாட்சா தெரு | B |

## ZONE – C

| Sl.No | Ward No | Name of the Street (in Tamil) | C - ZONE |
|---|---|---|---|
| 1 | வார்டு எண் 1 | கோரையார் தெற்கு தெரு | C |
| 2 | வார்டு எண் 1 | கோரையார் வடக்கு தெரு | C |
| 3 | வார்டு எண் 1 | கோரையார் கீழத்தெரு | C |
| 4 | வார்டு எண் 1 | அய்யன் தோட்டச்சேரி வடக்கு தெரு | C |
| 5 | வார்டு எண் 1 | அய்யன் தோட்டச்சேரி தெற்கு தெரு | C |
| 6 | வார்டு எண் 3 | தோட்டச்சேரி தமிழர் தெரு | C |
| 7 | வார்டு எண் 3 | தோட்டச்சேரி வடக்கு தெரு | C |
| 8 | வார்டு எண் 3 | தோட்டச்சேரி தெற்கு தெரு | C |
| 9 | வார்டு எண் 5 | லெட்சுமாங்குடி கீழத்தெரு | C |
| 10 | வார்டு எண் 5 | லெட்சுமாங்குடி மேலத்தெரு | C |
| 11 | வார்டு எண் 5 | மேலபணங்காட்டாங்குடி | C |
| 12 | வார்டு எண் 5 | பணங்காட்டாங்குடி தமிழர் தெரு | C |
| 13 | வார்டு எண் 6 | குனுக்கடி | C |
| 14 | வார்டு எண் 6 | புளியங்குடி கீழத்தெரு | C |
| 15 | வார்டு எண் 6 | புளியங்குடி நடுத்தெரு | C |
| 16 | வார்டு எண் 11 | போலீஸ் தெரு | C |
| 17 | வார்டு எண் 12 | வள்ளுவர் காலனி | C |
| 18 | வார்டு எண் 12 | அவ்வை காலனி மேலத்தெரு | C |
| 19 | வார்டு எண் 12 | சித்தாத்தங்கரை | C |
| 20 | வார்டு எண் 12 | அவ்வைகாலனி கீழத்தெரு | C |
| 21 | வார்டு எண் 14 | மேல்கொண்டாழி லைன் | C |
| 22 | வார்டு எண் 14 | மேல்கொண்டாழி வடக்கு தெரு | C |
| 23 | வார்டு எண் 14 | விநாயகர் கோவில் தெரு | C |
| 24 | வார்டு எண் 14 | தீன் நகர் | C |
| 25 | வார்டு எண் 21 | ஆசாத் நகர் | C |
| 26 | வார்டு எண் 22 | கட்டியப்பர் கோவில் தெரு | C |
| 27 | வார்டு எண் 23 | அம்மன் கோவில் தெரு | C |
| 28 | வார்டு எண் 23 | அம்மன் கோவில் சந்து | C |
| 29 | வார்டு எண் 23 | நாகங்குடி மேலத்தெரு | C |
| 30 | வார்டு எண் 23 | காடுவெட்டி தெரு | C |
| 31 | வார்டு எண் 24 | செங்கமேட்டுத்தெரு | C |
| 32 | வார்டு எண் 24 | அக்கரை புதுத்தெரு | C |
| 33 | வார்டு எண் 24 | லீலாவதி நகர் | C |

அலுவலக குறிப்பு

இந்நகராட்சியில் தற்போது சொத்துவரி மூலம் கிடைக்கக்கூடிய வருமானத்திலிருந்து இந்நகர மக்களுக்கு செய்து கொடுக்கப்பட வேண்டிய குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி, சாலைகள் வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கு தேவையான நிதி வசதி குறைவாக உள்ளதால் மேற்படி அடிப்படை வசதிகளை தங்கு தடையின்றி நிறைவேற்றிட ஏதுவாக சொத்துவரி மூலம் கிடைக்கும் வருவாயைப் பொருட்டு 01.04.2018 முதல் செய்யப்பட வேண்டிய பொது சொத்துவரி சீராய்வுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சதுரடி உயர்வுக்கான மண்டல அடிப்படை மதிப்புகளின் (Zonal Basic Value) தொகையை மன்றம் நிர்ணயம் செய்யலாம்.

(ந.க.எண்1105/2018/அ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 377** **நாள் 06.09.2018**

அலுவலக குறிப்பு :- **அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 3**

இந்நகராட்சி பொதுபிரிவில் இயங்கி வரும் TN50 U 2453 ஈப்பு வாகனம் 11.000 கி.மீ ஓடியுள்ளதாலும், பழுது ஏற்பட்டு இயக்கமுடியாத நிலையில் உள்ளது. கீழ்கண்ட பழுதுகள் சரி செய்யப்பட வேண்டும் என திரு.என்.குகன் ஓட்டுநர் **06.09.2018**ந் தேதிய விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

1. கியர் பாக்ஸ்
2. ஆயில் மாற்றம்
3. நான்குவீல் பிரேக்
4. இதரபணிகள்

மேற்கண்ட பழுதுகளை அரசு அங்கீகாரம் பெற்ற மஹேந்திரா நிறுவனம் டீலரான சிவா ஆட்டோ மொபைல்ஸ் திருச்சி நிறுவனத்தில் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.45.000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1392 /2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 378** **நாள் 06.09.2018**

அலுவலக குறிப்பு :- **அனுமதிக்கப்பட்டது**

**ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை**
**தனி அலுவலர் / ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**

**/ உண்மை நகல் /**

**ஆணையர்**
**கூத்தாநல்லூர் நகராட்சி**

## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28.09.2018 தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் 1

நகராட்சி ஆணையர் அவர்களது ஆகஸ்ட் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 379** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 2

நகராட்சி பொறியாளர் அவர்களது ஆகஸ்ட் 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 380** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 3

இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க மூன்று குழுக்கள் அமைக்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பணியினை எளிதாக கண்காணிக்கவும் முறைபடுத்தவும், நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் டெங்கு வருடாந்திர காலண்டர் அட்டவணை ஒரு பக்க அளவில் (52 பாக்ஸ்) அச்சடித்து ஒட்டப்பட வேண்டும். மேலும் டெங்கு கொசு உற்பத்தி இடங்கள் இல்லாத வீடுகளை பாராட்டுவதற்கும் Smiley Sticker ஒட்டப்படவேண்டும். எனவே பணியின் அவசர அவசியம் கருதி 7000 டெங்கு வருடாந்திர காலண்டர் அட்டவணையும் 7000 Smiley Sticker- ம் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ், திருச்சி என்ற கூட்டுறவு சங்கத்தில் நேரடியாக கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 85,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 530/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 381** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 4

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள 20 எண்ணிக்கை புஷ்கார்டினை பழுது நீக்குதல் மற்றும் 80 எண்ணிக்கை பச்சை மற்றும் நீலம் குப்பை தொட்டிகள் சப்ளை செய்யும் பணிக்கு ஒப்பந்தபுள்ளி 27.09.2018 அன்று கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம் | 2,29,000 |
| 2 | விஜயகுமார் ஒப்பந்ததாரர் வடபாதி வேளுக்குடி | 2,29,500 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஸ்ரீ சரவணா ஹார்டுவேர்ஸ் குத்தாலம் என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண். 1323/2018/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 382** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 9

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பூங்காங்களில் முக்கியமான பூங்காக்களை தேர்வு செய்து Onsite Composting Centre உரக்கிடங்கு அமைத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் அறிவுரையின்படி பாரதி நகர் பூங்கா, ஷாஆலிம் நகர் பூங்கா, செல்வி நகர் பூங்காக்களை தேர்வு செய்து உரக்கிடங்கு அமைத்திட கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | பாரதி நகர் பூங்காவில் உரக்கிடங்கு அமைத்தல் | மதிப்பீடு ரூ.1.20 இலட்சம் |
| | ஷா ஆலிம் நகர் பூங்காவில் உரக்கிடங்கு அமைத்தல் | மதிப்பீடு ரூ.1.20 இலட்சம் |
| | செல்வி நகர் பூங்காவில் உரக்கிடங்கு அமைத்தல் | மதிப்பீடு ரூ.1.20 இலட்சம் |

மேற்கண்ட மூன்று பணிகளுக்கு ரூ.3.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1406/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 387** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 10

கூத்தாநல்லூர் நகராட்சியில் புதிதாக கருணை அடிப்படையில் மூன்று பணியாளர்கள் நியமனம் செய்து பணி பார்த்து வருகின்றனர். மேற்படி பணியாளர்களுக்கு இருக்கை நாற்காலி S டைப் சேர் –4 வாங்கவும் மேலும் ஆணையர் அறையில் உள்ள ரோலிங் சேர் உடைந்துள்ளதால் புதிதாக வாங்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.28,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண் /2018/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 388** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 11

நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018–2019ன் கீழ் கூத்தாநல்லூர் நகராட்சி பகுதியில் இந்நகராட்சி சாலைகளை சீரமைப்பு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20308/2018/டிஓ2 நாள் 29.08.2018 செயல்முறை உத்திரவின்படி 24 சாலைப்பணிகள் 6.485 மீ நீளத்திற்கு புதுப்பித்து சீரமைப்பு ரூ.203.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 20.09.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் மேற்படி தினத்தில் சிப்பம் 1 – பணிக்கு பெறப்பட்ட கீழ்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பரீசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தபுள்ளி கோரிய தொகை | ஒப்பந்ததாரரர் ஒப்பந்த தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ஜி.குமார் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 1,77,74,067 | 1,83,07,149.00 | 3.00 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L1) |
| 2 | வீ.எழில்மாறன் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 1,77,74,067 | 1,83,50,031.00 | 3.24 சதவிகிதம் மதிப்பீட்டைவிட அதிகம் (L2) |

அலுவலக குறிப்பு

1. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக அனுமதியில் தார்சாலைகளை உடன் துவக்கியும் அனைத்து சாலைகளையும் எதிர்வரும் 04.01.2019க்குள் முடிக்கப்பட வேண்டும் என கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
2. நகராட்சி பொறியியல் கையேடு (Engineering Manual) தொகுதி 1 பகுதி 2 பிரிவு 2.7 2ல் பணியில் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி முதல் அழைப்பிலேயே (First Call) மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் வரை கூடுதலாக உள்ள ஒப்பந்தபுள்ளிகளை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம் என உள்ளது.
3. தற்போது மேற்படி சாலைபணிகளுக்கு வரப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளதால் இப்பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக செய்து தர கோரி L1 ஒப்பந்ததாரரான திரு.ஜி.குமார் ஒப்பந்ததாரர் மன்னார்குடி அவர்களிடம் இவ்வலுவலக கடித ந.க.எண். 535/2018/இ1 நாள் 20.09.2018 கோரியதில் மேற்படி நிறுவனம் தங்களது தேதிய கடிதத்தில் கட்டுமான பொருட்கள் விலை ஏற்றம் மற்றும் ஆட்கள் கூலி உயர்வின் காரணமாக இப்பணியினை மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைத்து செய்ய இயலாது என தெரிவித்ததுடன் தான் ஏற்கனவே ஒப்பந்தபுள்ளியில் அளித்துள்ள மதிப்பீட்டைவிட அதிகமாக விலையிலேயே இப்பணியினை முடித்து தர சம்மதிக்கிறேன் எனவும் தெரிவித்துள்ளார்.

4. மதிப்பீட்டைவிட அதிகமாகும் 3.00 சதவீத தொகையை மதிப்பீட்டில் உள்ள குத்து மதிப்பு தொகை (LS) அல்லது நகராட்சி பொதுநிதியிலிருந்து ஈடு செய்ய வேண்டும்.
5. அலுவலக குறிப்பு 1 முதல் 4 வரை உள்ள விபரங்களை மன்றம் பரிசீலனை செய்து வரப்பட்ட ஒப்பந்தபுள்ளியினை முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 535/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 389** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 12

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் சேகரிக்கப்படும் மக்கும் குப்பைகளை உரமாக்கிட ரேடியோ பார்க்கில் புதிய உரம் தயாரிக்கும் Onsite Composting கட்டிடம் கட்டும் பணிக்கு 19.09.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட கீழ்காணும் இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | சதவிகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. எம். உதயகுமார் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி | 4,00,000 | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| 2 | ஜி.குமார் ஒப்பந்ததாரர் மன்னார்குடி | 4,00,000 | 0.02% மதிப்பீட்டைவிட அதிகம் |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள திரு.எம். உதயகுமார் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள திரு.எம். உதயகுமார் ஒப்பந்ததாரர் லெட்சுமாங்குடி என்பவரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்

(ந.க.எண். 1380/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 390** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 13

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை திருவாரூர் கடிதம் ந.க.எண். 270/அ1/2018 நாள் 23.08.2018ந் தேதிய கடிதத்தில் 2016-2017 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.57293/- செலுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2016-2017 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.57293/- சம்மந்தப்பட்ட அரசு தலைப்பில் செலுத்திடவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.1813/2015/பி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 391** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 14

இந்நகராட்சியில் இ-டெண்டர் மூலம் ஒப்பந்தபுள்ளி திறப்பதற்கு Digital Signature Card ஆணையாளர், நகரமைப்பு ஆய்வர், இளநிலை பொறியாளருக்கும் புதிதாக வாங்கவும், பொறியாளருக்கு Digital Signature Card ஐ புதுப்பிக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.10,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2748/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 392** **நாள் 28.09.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 15

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 34 அறிவிப்பு எண் 14ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என்பதற்கிணங்க, கூத்தாநல்லூர் நகராட்சியில் உள்ள 24 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணற்றுநீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் வீதம் மொத்தம் 24 வார்டுகளில் ரூ.432 (நானூற்று முப்பத்து இரண்டு இலட்சம்) ஆகும். இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம்/தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வு தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே நகரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் தொழில் நிறுவனங்கள்/தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் ஈடு செய்து கொள்ளவும், மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் "expression of interest" விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

வார்டு எண் 1 முதல் 24 வரை 24 வார்டுகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கலாம்.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 535/2018/இ1)

நகர மன்ற தீர்மானம் எண்:- 393

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது.

நாள் 28.09.2018

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர் / ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி